மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மானு மதுரை மருத்துவ மனையைத் தமிழக அரசு அண்மையில்தான் அரசு மருத்துவ மனையாக ஆக்கியிருக்கிறது. அப்படி ஆக்கப்பட்ட அந்த மருத்துவ மனை மிகச் சிறிய வசதியுடையதாக இருக்கிறது என்பதை அரசு உணர்ந்து, அதற்குப் பின்னர் புதிய மருத்துவ மனையொன்று கட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு அதற்கான புறம்போக்கு நிலம் கைக்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்து இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த நிலத்தை மருத்துவத் துறையினிடத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அந்த நிலம் கிடைத்ததற்குப் பின்னர், அதிலே மருத்துவ மனை கட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குறைந்தது ஒரு இலட்ச ரூபாயாவது நன்கொடை வசூலிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நன்கொடை வசூலிப்பதை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தீவிரப்படுத்துவார்களானால், அடுத்த ஆண்டிலாவது அதற்கு மருத்துவ மனை கட்ட வாய்ப்பு ஏற்படும்.

Non-clinical Professors

***838 Q.—Thiru N. K. PALANISWAMY :** Will the Hon. the Minister for Health be pleased to state the number of non-clinical Professors under stagnation of salary in the Medical Department as on 30th November 1973?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பன்னிரண்டு.

திரு. என். கே பழனிசாமி : தலைவர் அவர்களே, மெடிகல் காலேஜில் இருக்கக்கூடிய நான்-கிளினிகல் ப்ரொஃபஸர்களும் எம்.பி.பி.எஸ். படித்திருப்பதால், மற்றவர்களுக்கு என்ன ஸ்கேல் ஆஃப் பே கொடுக்கப்படுகிறதோ அது இவர்களுக்கும் கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ரூபாய் 900—50—1,300 என்று பேராசிரியர்களுக்கு வழங்கப்படுகிற அந்தச் சம்பள விதத்தில் ரூபாய் 1,300 என்ற நிலையை ஓராண்டு, இரண்டாண்டுகளுக்கு முன்னரே இவர்கள் அடைந்திருக்கிறார்கள். ஓர் உயர்ந்த சம்பளத்தில் எல்லைக்கோடு வருகிறது. அதை அடைந்த பிறகு மேலும் சம்பளம் தர இப்பொழுது வாய்ப்பு

1974, ஏப்ரல் 17]

இல்லே. ஆனல், கல்லூரியின் முதல்வராக, இயக்குநராக, துணை இயக்குநராக இப்படி யாருக்கு ஆர்வம் இருக்கிறதோ அதைப் பொறுத்து அவர்களில் சிலர் பதவி உயர்வு பெறக்கூடும். எட்டு ஆண்டு, பத்து ஆண்டு சம்பள உயர்வு பெற்ற பின்னர் ஒரு குறிப்பிட்ட எல்லையை அடைந்த காரணத்தால் ஏற்பட்டிருக்கிற ஸ்டாக்னேஷனே தவிர, அதுவும் உயர்ந்த சம்பளத்தில் உள்ளவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஸ்டாக்னேஷனே தவிர, குறைந்த சம்பளத்தில் ஏற்பட்ட ஸ்டாக்னேஷன் அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலேவர் அவர்களே, இப்பொழுது திருத்தியமைக்கப்பட்ட யு.ஜி.ஸி. ஸ்கேல் ஆப் பே கொடுக்கவேண்டும் என்று பரிந்துரை அண்மையில் வந்திருக்கிறதே அது இந்த நான்-க்ளினிகல் ப்ரொபஸர்களுக்கும் பொருந்துமா? அப்படியிருந்தால், அந்த முறையில் என்ன அதிகச் செலவாகும் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலேவர் அவர்களே, அந்த விவரம் எனக்குத் தெரியவில்லே. அது தெரிந்த பின்னர்தான் அதுபற்றி நான் எதுவும் கூற முடியும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: தலேவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, ஒரு குறிப்பிட்ட நிலேயை சம்பள உயர்வில் அடைந்தபிறகு ஸ்டாக்னேஷன் ஏற்படுகிறது என்று சொன்னர்கள். நான்-க்ளினிகல் சைடில் பணியாற்ற முன்வருவதில்லே. ஆகவே, அவர்களுக்கு ஏதாவது விசேஷ சலுகை அளிக்கும் வகையில், ஸ்டாக்னேஷன் ஏற்படும்போது மேலும் ஒரு உயர்வு கொடுக்கும் வகையில் அரசு ஏதாவது பரிசீலனே செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலேவர் அவர்களே, இவர்களில் பெரும்பாலோர் 'நான்-கிளினிகல்' என்ற பகுதியில்தான் வருகிருர்கள். பையோ-கெமிஸ்ட்ரி, பதாலஜி, பார்மகாலஜி, ஃபாரன்ஸிக் மெடிஸன், மைக்ரோ-பயாலஜி, அனடமி, ஃபிஸியாலஜி ஆகிய இப்படிப்பட்ட பாடங்களுக்குள்ள பேராசிரியர்கள் இந்தப் பிரிவில் வருகிருர்கள். இவர்கள் தனிப்பட்ட முறையில் மருத்துவம் செய்வதில்லே என்ற அடிப்படையில் அதற்காக ஈட்டுத் தொகையொன்று தரப்படுகிறது. ஆகவே, அந்த நிலேயில் இவர்களே மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பேசவேண்டிய நிலே இல்லே.

[1974 ஏப்ரல் 17

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நான் க்ளினிகல் ப்ரொஃபஸர்கள் தனியாக வெளியில் மருத்துவ விடுதிகள் வைத்து, அங்கு ப்ராக்டிஸ் செய்யக்கூடாது என்பதற்காகத் தனியாகப் பணம் தரப்படுகிறது என்றாலும், பல ப்ரொபஸர்கள் வெளியிலே பெரிய க்ளினிக்குகள் வைத்துக்கொண்டு ப்ராக்டிஸ் செய்கிறார்கள். அதிலே பல அமைச்சர்கள்கூட போய் ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட ப்ரொபசர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் க்ளினிகல் ப்ரொபசர்கள் என்ற தகுதியைப் பெறுகிறவர்கள் யாருக்கும் மருத்துவம் செய்வதில்லை, என்ற அடிப்படையில்தான் அவர்கள் நான்-க்ளினிகல் ப்ரொபசர்கள் ஆகிறார்கள். மெடிசின், சர்ஜரி, கைனிகாலஜி ஆகிய யூனிட்களில் உள்ள கிளினிகல் ப்ரொபசர்கள், அசிஸ்டென்ட் கிளினிகல் ப்ரொபசர்கள் நேரடியாக மருத்துவம் செய்யக் கூடாதே தவிர, மருத்துவ ஆலோசனை வழங்க எல்லா வாய்ப்பும் அவர்களுக்கு உண்டு.

They should practise but they can give consultation.
என்று இயற்கையாகவே உரிமை இருக்கிறது. கன்சல்டேஷன் அவரிடமிருந்து பெற்றால்தான் ஒருவருக்கு உடல் நலக் குறைவு நீங்கும் என்று கருதும் நிலைமை இருக்குமானால், அந்தக் கன்சல்டேஷன் தரும்போது அதைக் குற்றமாகக் கருதவில்லை, ப்ராக்டிஸ் வேறு; கன்சல்டேஷன் வேறு.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அரசாங்க ஊழியர்களுக்கு பொதுவாக, பத்து ஆண்டுகள், 12 ஆண்டுகள் என்று டைம் ஸ்கேல் வைத்திருக்கிறார்கள். காரணம், இந்தக் காலத்திற்குள் அவர்களுக்குப் பதவி உயர்வு வந்துவிடும் என்றுதான் ஒவ்வொரு காடிகரிக்கும் இப்படி டைம் ஸ்கேல் வைத்திருக்கிறார்கள். நம்முடைய ஹெல்த் டிபார்ட்மெண்டில் நான்-க்ளினிகல் ஸ்டாஃபுக்கு ப்ரொமோஷன் சான்ஸ் மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, அதிகப்படியான பதவி உயர்வு கொடுக்க அவர்களுக்கென்று ஒரு சிறப்புத் திட்டத்தை நம்முடைய அரசாங்கம் வகுக்குமா ?

1974 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட துறைகளை அப்-கிரேடட் டிபார்ட்மென்ட்ஸ் என்று சென்னை மருத்துவக் கல்லூரியில், இந்திய அரசு அகில இந்திய அடிப்படையில் தரும் உதவியை வைத்துக்கொண்டு சில பகுதிகளில் செய்யப்பட்டிருக்கின்றன. இப்படி எல்லா இடங்களிலும் பதவி உயர்வு தர வேண்டும் என்பதற்காக எதையும் செய்ய முடியாது. பதவி உயர்வு வேண்டும் என்பதற்காக உயர்ந்த பதவியை, தலைமைப் பதவி போன்ற ஒன்றை உருவாக்க முடியாது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நான்-க்ளினிகல் ஸ்டாஃப் என்று சொல்லக்கூடிய ப்ரொபசர்கள் கன்சல்டேஷன் செய்வதற்கு உரிமை இருக்கிறதென்று சொல்லப்படுகிறது. கன்சல்டேஷன் என்னும்போது, வியாதியஸ்தரைப் பார்த்து, அவருக்குள்ள நோயைத் தீர்ப்பதற்கு ஆலோசனை சொல்வதுதான் கன்சல்டேஷன் என்பது. அதைத்தான் மற்ற மருத்துவர்களும் செய்கிறார்கள். மருந்து கொடுப்பதற்கென்று உதவியாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மருந்து கொடுக்கிறார்கள். ஆகையால், கன்சல்டேஷன் என்று சொன்னால் ஒரு டாக்டர் இன்னொரு டாக்டரிடம் போய், இம்மாதிரி வியாதிக்கு உங்களுடைய அபிப்பிராயம் என்ன என்று கேட்டு, இப்படி இப்படி வைத்தியம் செய்யவேண்டும் என்று அந்த டாக்டர் சொல்வதுதான். ஆனால், வியாதியஸ்தரே நேரடியாகச் சென்று அவர்களிடம் கன்சல்டேஷன் செய்துகொள்வதெல்லாம்கூட ப்ராக்டிஸ்தான். மற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் கன்சல்டேஷன் என்றிருப்பதையும் அவர்களைப் பொறுத்து தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அவர்கள் தெரிவிக்கிறபோதே, நான்-க்ளினிகல் ப்ரொபசர் அல்லது அப்படிப்பட்ட துறையிலுள்ள ஸ்டாஃப் கன்ஸல்டேஷன் செய்வதும் ப்ராக்டிஸ்தான் என்று சொன்னார்கள். நான்-க்ளினிகல் ஸ்டாஃப்புக்கு—அதாவது நான்-க்ளினிகல் ப்ரொபசருக்கு—கன்ஸல்டேஷன் உரிமை கூடக் கிடையாது. அதற்காக ஈட்டுத் தொகை தரப்படுகிறது. க்ளினிகல் ஸ்டாஃப்புக்கு ஈட்டுத் தொகை தரப்படவில்லை. ஈட்டுத் தொகை தராத காரணத்தால், அகில இந்தியாவிலும் Consultation is permitted for any Professor who is concerned with clinical side
என்று இருக்கிறது. கன்ஸல்டேஷன் என்பது என்ன, ப்ராக்டிஸ்

என்பது என்ன என்று வரையறுத்து வைத்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். இன்ன மருந்து கொடு, அல்லது இன்ன ஊசி போடு என்று எழுதித் தருகிறார்களே அது கன்ஸல்டேஷன். இந்த ஊசியை இன்னொரு டாக்டர் வேறொரு இடத்தில் போடுவது ப்ராக்டிஸ் ஆகும். டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்களிடம் ஒருவர் கன்ஸல்டேஷன் செய்துகொண்டார் என்று சொன்னால், டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்கள் மருந்து எழுதிக் கொடுத்துவிடுவார்கள். அந்த மருந்தை வாங்கி வேறொரு இடத்திலுள்ள டாக்டரிடம் கொண்டுபோய் போட்டுக் கொள்ளவேண்டும். இதுதான் அவர்கள் கையாண்ட முறை. இதை மாற்றுவதென்றால், அகில இந்திய அடிப்படையில்தான் ஒரு எண்ண ஓட்டம் ஏற்பட்டு மாற்ற வேண்டும்.

Treatment for Tuberculosis

* 839 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of Government to prepare a scheme for a shorter period of treatment for T.B. patients in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்விக்கும் விடை சொல்லிவிடலாம்.

* 840 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நடமாடும் காசநோய் மருத்துவ மனைகள் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை, எங்கெங்கு இயங்கி வருகின்றன ?